# 79வது சுதந்திர தினம் : கோட்டைக் கொத்தளத்தில் எழிலார்ந்த விழா! முதல்வர் மு.க.ஸ்டாலின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று - சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பினை பார்வையிட்டார்.



சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் தேசியக் கொடியேற்று விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, முப்படைகளின் உயர் அதிகாரிகள், தமிழ்நாடு காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அறிமுகப்படுத்தி வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்றுமுன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பினை பார்வையிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.




சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நேற்று முன்தினம் (15.8.2025) நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருதுகள், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான விருதுகள், மகளிர் நலத்திற்கான சிறந்த சேவைக்காக தொண்டாற்றியவர்களுக்கான விருது, சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள், காவல் பதக்கங்கள் ஆகிய தமிழ்நாடு அரசின் விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் விருதுக்கான தங்கப் பதக்கம், காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர், விண்வெளித் துறைச் செயலாளர் மற்றும் விண்வெளி ஆணையத்தின் தலைவர் முனைவர் வ. நாராயணன் அவர்களுக்கும் துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.